**செ.வெ.எண் :744** **நாள்: 15.11.2021**

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (15.11.2021) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது:-

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்வி கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 368 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்களை விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்த விவரத்தை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

மேலும், இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் சத்துணவு திட்டம் மூலம் கருணை அடிப்படையில் ஒரு நபருக்கு சத்துணவு அமைப்பாளர் பணிக்கான பணி நியமன ஆணையினையும், ஒரு நபருக்கு சத்துணவு சமையலர் பணிக்கான பணி நியமன ஆணையினையும் வழங்கினார். பின்னர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு மாற்றுத்திறனாளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஊன்றுகோல் வேண்டி விண்ணப்பித்த தன்னடிப்படையில் ஊன்றுகோல் உடனடியாக வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு. என். ஓ. சுகபுத்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. H.S. ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. சாலை தவவளவன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**